CAREERINDIA

Language Code : **17**

इस पुस्तिका में **20** मुद्रित पृष्ठ हैं।
This booklet contains **20** Printed pages.

# JSS-24-I

**प्रश्न-पत्र-I / PAPER-I**
**तमिल भाषा परिशिष्ट**
**Tamil Language Supplement**
**भाग-IV & V / PART-IV & V**

मुख्य परीक्षा पुस्तिका संख्या / Main Test Booklet No.

मुख्य परीक्षा पुस्तिका कोड / Main Test Booklet Code
**D**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें। / FOR INSTRUCTIONS IN TAMIL SEE PAGE 2 OF THIS BOOKLET.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं**।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **D**। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :

   भाग-IV : भाषा-I (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा-II (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं। **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा-I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

## INSTRUCTIONS FOR CANDIDATES

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page/ marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **D**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :

   Part-IV : Language-I (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language-II (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part-V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ____________________
Name of the Candidate (in Capitals) :
अनुक्रमांक : (अंकों में) / Roll Number : in figures ____________________
: शब्दों में / in words ____________________
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ____________________
Centre of Examination (in Capitals) :
परीक्षार्थी के हस्ताक्षर : ____________________ निरीक्षक के हस्ताक्षर : ____________________
Candidate's Signature : Invigilator's Signature :
Facsimile Signature Stamp of
Centre Superintendent : ____________________

www.careerindia.com

CAREERINDIA

Language Code : **17**

# JSS-24-I

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**D**

**இந்த நூற்கட்டு 20 பக்கங்கள் கொண்டது**

**தாள்–I**

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

**பகுதி IV & V**

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.**

**இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டுக் குறிப்புகள் :**

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி–I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப்பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம்/ கருப்பு மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந்நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **D** ஆகும். இந்நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2–லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றேதானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இந்த தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
   பகுதி-IV : மொழி-I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி-V : மொழி-II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி-IV இல் மொழி-I க்கும், பகுதி-V இல் மொழி-II க்கும் தலா 30 வினாக்கள். இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.
8. தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி-**I** (பகுதி **IV** இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி-**II** (பகுதி-**V** க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.
9. இத்தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ____________________

Facsimile signature stamp of Centre Superintendent : ____________________

www.careerindia.com

CAREERINDIA

தேர்வு எழுதுவோர் **தமிழைத்**, **தமிழ்-I** மொழியாக தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி-IV (கே.எண்: 91 - 120)** -க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part-IV (Q.No. 91-120)**, if they have opted **TAMIL** as **Language-I** only.

www.careerindia.com

CAREERINDIA

## PART–IV

## LANGUAGE–I

## தமிழ்

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 91 - 99)**

உலக நாவல் மேதைகளில் ஒருவரான ஹென்ரி ஜேம்ஸ் (1843-1916) புனைகதைக்கலை என்னும் கட்டுரையில் ''வாழ்க்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சித்தரிக்க முயல்கிறது என்ற ஒரு காரணத்தினாலேயே நாவல் தொடர்ந்து இயங்கி வருகிறது'' என்றார். நாவலின் உள்ளார்ந்த இயல்பினையும் அடிப்படையையும் இக்கூற்றில் உணர்த்திவிட்டார் ஜேம்ஸ்.

தனக்கு முந்திய இலக்கிய வடிவங்கள் அனைத்தையும்விட நாவலே சமூக வாழ்க்கையை ஆகக் கூடிய அளவில் சித்தரிக்கிறது. இதனாலேயே மேனாட்டுத் திறனாய்வாளர் சிலர் நாவல் ''சமூகத்தின் மனச்சாட்சிச் சாதனம்'' என்று கூறுவர். அதாவது நவீனகாலத்து வாழ்க்கை பற்றிய முக்கியமான சிந்தனைகளும் உணர்வுகளும் நாவலிலேயே சிறந்த வெளிப்பாட்டைப் பெறுகின்றன. இதனால் இயல்பாகவே நாவல் சமூகச் சாசனம் ஆகிறது. கற்றோர்க்கு மட்டும் அமைந்திருந்த செய்யுள் இலக்கியமுறை போய் உரைநடையில் புனைகதை எழுதப்படத் தொடங்கியதும் இலக்கியத்தின் தன்மையே மாறிவிட்டதென்பர். நாவலினால் 'இலக்கியம்' மக்கள் சார்ந்ததாயிற்று ; பெருந்தொகை வாசகருக்குரியதாயிற்று ; ஜனரஞ்சகமாயிற்று ; போதனைக் கருவியாயிற்று ; தலையாய பொழுது போக்குச் சாதனமாயிற்று ; சுருங்கச் சொன்னால் மற்றெந்த இலக்கியத்தையும் விட நாவலின் சமூகப் பொறுப்பு அதிகமாயிற்று.

பொருட்செறிவு, வடிவ வார்ப்பு, உத்திப் பிரயோகம் என்பவற்றில் ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபாடுண்டு. இயற்கைப் பண்பும் யதார்த்தமும் மயங்கும் நாவல்களும் உண்டு. ஆயினும் இவை நுணுக்க விவரங்களே.

நாவல் வரலாற்றில் அரைப்பங்கு இப்போக்குக்கு விளக்கமாயமைந்திருக்கிறது.

**91.** அரைபங்கு நாவல்கள் __________ நிறைந்தவையாகும்.

(1) யதார்த்தம் (2) வரலாறு

(3) தொன்மம் (4) புனைவு

**92.** நாவல்கள் நவீனகால வாழ்வு பற்றிய __________, __________ வெளிப்படுத்துகின்றன.

(1) சிந்தனை, உணர்வுகளை (2) புரிதல், விருப்பங்களை

(3) சிந்தனை, உண்மைகளை (4) புரிதல், கருத்துகளை

www.careerindia.com

CAREERINDIA

**93.** _________ இலக்கியத்தை _________ ஆனது என மாற்றியுள்ளது.

(1) கவிதை, மக்களுக்கு (2) நாவல், கற்றார்க்கு

(3) நாவல், மக்களுக்கு (4) கவிதை, கற்றார்க்கு

**94.** இலக்கணக் குறிப்பு தருக : உள்ளார்ந்த இயல்பு.

(1) வினையாலணையும் பெயர் (2) வினை எச்சம்

(3) பெயரடை (4) வினை அடி

**95.** வாழ்க்கையை _________ இலக்கிய வடிவம் _________.

(1) அடையாளப்படுத்தும், நாவல்

(2) மேம்படுத்தும், கவிதை

(3) செம்மைப்படுத்தும், நாடகம்

(4) பிரதிநிதித்துவப்படுத்தும், நாவல்

**96.** _________ சமூக வாழ்க்கையைச் சித்தரிப்பதால் அதை சமூகத்தின் _________ எனலாம்.

(1) நாவல், மனசாட்சி (2) கவிதை, கண்ணாடி

(3) நாடகம், பிரதிநிதி (4) ஹைக்கூ, படைப்பு

**97.** நாவல் சமூக _________ அது _________ தன்மையையே மாற்றிவிட்டது.

(1) வழிகாட்டி, கதையின் (2) சாசனம், இலக்கியத்தின்

(3) விளைபொருள், படைப்பின் (4) கண்ணாடி, வாழ்வின்

**98.** மற்ற இலக்கிய _________ விட நாவல் சமூக பொறுப்பு _________ உடையது.

(1) போக்குகளை, அதிகம் (2) உத்தி, அதிகம்

(3) உள்ளடக்கங்களை, குறைவு (4) வடிவங்களை, அதிகம்

**99.** இலக்கணம் தருக : இயற்கை பண்பும் யதார்த்தமும்

(1) உம்மைத் தொகை (2) பெயரடை

(3) தன்மை பன்மை (4) எண்ணும்மை

www.careerindia.com

CAREERINDIA

**பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 100 - 105)**

கூதிர்ப் பருவத்தில் கூதிர்க்காற் றடிக்கும்
மிதந்து செல்லும் மேகம் சூற்கொளும்
குளத்து மீனெலாம் குஞ்சு பொரிக்கும்

வெப்பங் கொடுக்கும் பருவமே வேனிலாம்
இளவேனில் முதுவேனில் இரண்டும் - செங்கதிர்க்
கோபத்தில் தோன்றும் குழந்தைக ளாகும்.

சித்திரை வைகாசி இளவேனிற் காலம்
குயில் கூவு தற்கிது மிகவனு கூலம்
எச்சில் வண்டுகள் இப்பரு வத்தில்
விரிந்த பூக்களில் விழித்தெழுந் திருக்கும்.

ஆவணி புரட்டாசி கார்கால மாகும்.
அறுபது நாட்களே அதன்வய தாகும்.
சீர்கொண்டு விளங்கும் கார்காலந் தன்னில்
நீர்கொண்ட மேகம் ஊர்வலம் போகும்.
வந்து வந்து வாடைக்காற் றடிக்கும்.

முன்பனிக் காலம் முடிந்த பின்னர்ப்
பின்பனிக் காலம் உடனே பிறக்கும்
இன்னல் விளைக்கும் இக்காலந் தன்னில்
உத்தர வின்றி உலவைக்காற் றடிக்கும்.

முற்றிய வெப்பமே முதுவேனிற் பருவமாம்.
கோடை வந்ததும் கோடைக்காற் றடிக்கும்.
ஏமாற்றும் கானல்நீர் எங்கும் தோன்றும்.
வலியனும், காடையும், வானம் பாடியும்,
மகிழ்ச்சி கொள்ளும். மல்லி மலரும்.
மாதிரி காட்டிப் பாதிரி பூக்கும்.

**100.** எதுகை இணையைக் காண்க :

(1) முன்பனி - பின்பனி
(2) இன்னல் - உத்தரவு
(3) ஆவணி - அறுபது
(4) முற்றிய - கோடை

**101.** பொருந்தாததைக் காண்க.

(1) இன்னல் விளைக்கும் பின்பனி
(2) மேகம் சூள்கொள்ளும் இளவேனில்
(3) உலவைக் காற்றடிக்கும் பின்பனி
(4) பாதிரி பூக்கும் முதுவேனில்

www.careerindia.com

CAREERINDIA

**102.** வந்து வந்து - இலக்கணம் தருக :

(1) வினைத் தொகை (2) இரட்டைக் கிளவி

(3) அடுக்குத் தொடர் (4) பண்புப் பெயர்

**103.** பொருந்தாத இணைகள் :

(1) கானல் நீர் - முதுவேனில் (2) வாடைக்காற்று - கார்காலம்

(3) மல்லிமலரும் - முதுவேனில் (4) ஐப்பசி, கார்த்திகை - கார்காலம்

**104.** சீர்கொண்டு விளங்கும் _________, காடை மகிழும் _________.

(1) கார்காலம், முதுவேனில் (2) வாடை, இளவேனில்

(3) வானம்பாடி, கூதிர் (4) கூதிர், இளவேனில்

**105.** சித்திரை வைகாசி - இலக்கணம் தருக.

(1) வேற்றுமைத் தொகை (2) எண்ணும்மை

(3) உம்மைத் தொகை (4) பண்புத் தொகை

**106.** நீங்கள் ஹிந்தி பேசும் ஆசிரியர், நீங்கள் பஞ்சாப் பகுதியில் தொடக்கப் பள்ளி ஆசிரியராகப் பணி அமர்த்தப்படுகிறீர்கள். அப்பகுதியின் மொழி உங்களுக்குத் தெரியாது, அதனால் நீங்கள் செய்ய வேண்டியது :

(1) அப்பகுதி மக்களை ஹிந்திக்கு ஊக்குவித்தல்

(2) உடனடியாக ஹிந்தி பேசும் பகுதிக்கு மாற்றல் செய்ய விண்ணப்பித்தல்

(3) குழந்தைகளின் மொழியை ஆதாரமாகக் கொண்டு கற்பித்தலைத் தொடங்குதல்

(4) ஆங்கிலத்தில் தகவல் பரிமாற்றம் செய்தல்

**107.** ஒரு குழந்தை ஒரு பாடத் தலைப்பு பற்றிய பிரைன்ஸ்டோர்மிங் செய்த பிறகும் ஒரு பத்தி எழுத முடியாத நிலையில் இருக்கிறாள். ஆனால் பெரியவர்களோ உடன் கற்பவர்களோ வழி காட்டும் போது எழுத முடிகிறது. இந்த வழி காட்டுதல் இவ்வாறு அழைக்கப்படுகிறது :

(1) குழு கற்பித்தல்

(2) துணைக்கருவி அமைத்தல்

(3) உடன் பயில்வோர் கற்பித்தல்

(4) உடன் பயில்வோர் ஆலோசனை

**108.** மொழி தன்வயமாக்கல் இப்போதுதான் நிகழ்கிறது :

(1) குழந்தை மொழியை அறிந்து கொள்ளும் வாய்ப்பு பெறும்போது

(2) இலக்கண விதிகள் குழந்தைக்குக் கற்பிக்கப்படும்போது

(3) மொழிபெயர்ப்புப் பயிற்சி குழந்தைக்குக் கொடுக்கப்படும்போது

(4) வாசிப்பதற்கான வாய்ப்பு குழந்தைக்குக் கொடுக்கப்படும்போது

www.careerindia.com

CAREERINDIA

**109.** பாடப் புத்தகம் பற்றிய கருத்தில் எது சரியானது ?
(1) பாட நூல் பதிலீடு செய்ய முடியாத ஒன்று
(2) ஆசிரியர் மற்றும் மாணவருக்கு ஒரு பாடப்புத்தகமே இறுதியானது
(3) பாடத்திட்டத்தில் உள்ள நோக்கத்தை அடைய அது உதவுகிறது
(4) ஒரு பருவத்துக்கு உரிய கல்விச் செயல்பாடுகளுக்கான திட்டமிடுதலாக அது உள்ளது

**110.** ஐந்தாம் வகுப்பு ஆசிரியரான நீங்கள் மாணவர்களிடம் பாடப்பகுதியைத் தெளிவாக முழுமையாகப் படிக்கச் சொல்கிறீர்கள். பிறகு பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கச் சொல்கிறீர்கள். இந்தச் செயல்பாட்டின் வழி மாணவர் களுக்கு எதற்கான ஊக்கத்தைத் தருகிறீர்கள் ?
(1) செறிவான வாசிப்பு (2) விரிவான வாசிப்பு
(3) ஸ்கேனிங் (4) ஸ்கிம்மிங்

**111.** ஒரு பாடப் பனுவலை உள்ளூடிப் படித்து அல்லது கூர்மையாகப் படித்து அதிலிருந்து குறிப்பிட்ட தகவலைத் தேடி அறியப் பயன்படும் புரிதல் திறன் :
(1) எவால்யுயேட்டிவ் (2) குளோபல்
(3) லோக்கல் (4) இன்ஃபரென்ஷியல்

**112.** கண்டறிந்து இலக்கணம் கற்பிக்கும் முறையில் நாம் முதலில் செய்ய வேண்டியது :
(1) தொடர் பயிற்சி வழி பயிற்சி அளித்தல்
(2) எடுத்துக்காட்டுகள் தருதல்
(3) விதிகளைத் தருதல்
(4) நம்பகத்தன்மை கொண்ட தொடர்பு மொழி தருதல்

**113.** உண்மைத் தகவலுக்கு அப்பால் திட்டமிடுதல் அல்லது அனுமானித்தலுக்கான ஒரு முறை :
(1) சூழலின் வழி வருவித்தறிதல் (2) விளக்கமளித்தல்
(3) பகுத்தாய்தல் (4) உய்த்துணர்தல்

**114.** வகுப்பறையில் தாய்மொழியை விலக்கி வைத்தல் இந்த முறையின் பண்புக் கூறு :
(1) நேரடி முறை (2) இயற்கை முறை
(3) இருமொழித்தன்மை முறை (4) மொழி ஒலிப்பதிவு முறை

**115.** ஒரு மாணவர் சில சொற்களைத் தவறாக உச்சரித்த போதும் 'ஒட்டுமொத்த மொழிப் பயன்பாடு' குறித்து ஓர் ஆசிரியர் என்ற முறையில் பாராட்டுகிறீர்கள். நீங்கள் வகுப்பில் பயன்படுத்தும் இந்த அணுகுமுறை :
(1) அமைப்புவாத அணுகுமுறை
(2) முழுமையான மொழி
(3) தகவல் பரிமாற்றம்
(4) கட்டமைப்புவாத அணுகுமுறை

www.careerindia.com

**116.** மாணவர்கள் விரும்புவதை எழுதும் திறனை ஓர் ஆசிரியர் ஊக்கப்படுத்த வேண்டும், இந்த எழுத்துத் திறனின் வழி கிடைக்கும் நன்மை :

(1) தமது முதல் மொழியின் பண்புக் கூறுகளை எழுதும் மொழிக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல்

(2) மாணவர்களை சரளமாகவும் படைப்பாற்றலுடனும் எழுத ஊக்கமளிக்கிறது

(3) எழுதவும் எழுதாமல் இருக்கவும் சுதந்திரம் அளிக்கிறது

(4) மாணவர்கள் அதிகம் எழுத வேண்டும் என்றோ, முழுமையாகச் சரியாக எழுத வேண்டும் என்றோ உணர்வதில்லை

**117.** ஒரு குழந்தை தனது உயர்நிலை மூளைத்திறன் செயல்பாடு அதாவது அறிவுத்திறன் அல்லது காரண காரிய அறிவுத்திறன் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டிய கற்றல்முறை :

(1) அமைப்பு கற்றல் (2) மொழிச் சொல் கற்றல்

(3) கோட்பாட்டுக் கற்றல் (4) மூளை இயக்கத் திறன் கற்றல்

**118.** மாணவர்களிடம் பேச்சுமொழியை மேம்படுத்த பின்வருவனவற்றில் எந்த வகுப்பறைப் பயிற்சி உதவுகிறது ?

(1) புதிய சொற்கள் அல்லது பழக்கமற்ற சொற்களைச் சரியான உச்சரிப்புடன் சொல்லிப் பயிலுதல்

(2) ஆசிரியருடன் இணைந்து குழுவாக பாடப்பகுதியைப் படித்தல்

(3) கவிதையை மனப்பாடம் செய்து குழுவாக ஒப்பித்தல்

(4) பாத்திரமேற்று உரையாடுவதில் பங்கு பெறுதல்

**119.** ‘மொழி இடுகுறித்தன்மை கொண்டது’ என்று கூறும்போது அதன் பொருள் :

(1) மொழி முன்னமைந்த கொள்கைகளைப் பின்பற்றுகிறது

(2) ஒரு மொழியின் சொற்களுக்கும் சொற்பொருளுக்கும் இடையில் உள்ளார்ந்த உறவு உள்ளது

(3) சொற்களுக்கும் சொற்பொருளுக்கும் இடையிலான உறவு சரியான காரணத்துடன் அமைந்துள்ளதே தவிர எதேச்சையாக அமைவதில்லை

(4) ஒரு மொழியின் சொற்களுக்கும் சொற்பொருளுக்கும் இடையில் உள்ளார்ந்த இயற்கை உறவு இல்லை

**120.** மொழி கற்பித்தலில் குறையறியும் தேர்வின் நோக்கம் :

(1) மாணவர்களின் மதிப்பெண் பதிவேட்டில் தேர்வின் கண்டறிதலைப் பயன்படுத்தல்

(2) சம்மேட்டிவ் மதிப்பீடு செய்யத் திட்டமிடுதலும் கேள்வி தயாரித்தலும்

(3) பெற்றோர் சந்திப்பில் பெற்றோர்களிடம் தெரிவித்து அவர்களைக் கவனம் செலுத்தச் சொல்லுதல்

(4) மாணவர்களின் கற்றல் புரிதல் இடைவெளிகளைத் தெரிந்து கொண்டு குறைநீக்க நடவடிக்கையைத் திட்டமிடுதல்

தேர்வு எழுதுவோர் **தமிழைத், தமிழ்-II** மொழியாக தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி-V (கே.எண்: 121 - 150)** -க்கான விடைகளைத் தர வேண்டும்.

Candidates should attempt the questions from **Part-V (Q.No. 121-150)**, if they have opted **TAMIL** as **Language-II** only.

www.careerindia.com

CAREERINDIA

## PART–V

## LANGUAGE–II

## தமிழ்

**பகுதித் தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE-II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே-V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 121 - 128)**

பிற்கால இலக்கியங்கள் என்று கூறியது கி.பி 15 -ம் நூற்றாண்டுக்குப் பிறகு உண்டான இலக்கியங்களை. இக்காலத்தில் காகிதம், பேனா முதலிய எழுது கருவிகள் தோன்றி, ஓலைச் சுவடிகளும் எழுத்தாணிகளும் மறையத் தொடங்கின. அச்சு யந்திரங்கள் ஏற்பட்டு அச்சுப் புத்தகங்களும் தோன்றலாயின. இக்காலத்தில்தான் வசன இலக்கியங்கள் பெருகிவரத் தொடங்கின. மொழிபெயர்ப்பு நூல்களும் அதிகமாகத் தோன்றின. சிந்து, பள்ளு, குறவஞ்சி, நொண்டி, காதல் முதலிய பிற்காலத்துப் பிரபந்த நூல்களும், ஸ்தல புராணங்களும், தேம்பாவணி, இரக்ஷண்ய யாத்திரிகம், சீறாபுராணம் முதலிய கிறிஸ்துவ இஸ்லாமிய நூல்களும், பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் முதலிய நாவல் என்னும் நவீன இலக்கியங்களும் ஏராளமாகத் தோன்றின.

முற்காலத்தில் தமிழ் ஐம்பெருங் காவியங்கள் இருந்தன. அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்பன. இவற்றில் குண்டலகேசியும், வளையாபதியும் இப்போது மறைந்துவிட்டன.

இப்போது தமிழில் சிறந்த காவியங்களாகக் கருதப்படுபவை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, கம்பராமாயணம், நைடதம், நளவெண்பா முதலியவை. இவற்றுடன் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் ஆகியவற்றையும் கூறலாம்.

காரிகை கற்றுக் கவி பாடலாம். ஆனால், கவியிலே உண்மையும் அழகும் இனிமையும் அமையப் பாடுவது அரிது. காவியங்களையும் இயற்றலாம். ஆனால், அதில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டு வகையான சுவைகளையும் அமைத்துக் காவியம் அமைப்பது அரிது. இவையெல்லாம் பொருந்த அமையுமானால் அதுவே காவியக் கலை என்று போற்றப்படும். காவியக் கலையைப் போற்றி வளர்ப்பது நாகரிகம் பெற்ற மக்களின் கடமையாகும்.

**121.** பிற்காலப் பிரபந்தங்கள் :

(1) சீறாப்புராணம், சிந்து, குறவஞ்சி

(2) சிந்து, பள்ளு, குறவஞ்சி

(3) ஸ்தல புராணங்கள், சிந்து, பள்ளு

(4) தேம்பாவணி, குறவஞ்சி, சிந்து

www.careerindia.com

CAREERINDIA

**122.** எண்வகைச் சுவையுடையது __________.

(1) பாடற்கலை (2) ஓவியக்கலை

(3) காவியக்கலை (4) இசைக்கலை

**123.** நவீன இலக்கியங்கள் :

(1) தேம்பாவணி, பள்ளு

(2) ஸ்தல புராணங்கள், பிரதாப முதலியார் சரித்திரம்

(3) சீறாப்புராணம், குறவஞ்சி

(4) பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம்

**124.** மறைந்துபோன நூல்கள் :

(1) தேம்பாவணி, வளையாபதி (2) மணிமேகலை, வளையாபதி

(3) சீறாப்புராணம், சூளாமணி (4) வளையாபதி, குண்டலகேசி

**125.** வசன இலக்கியங்களின் காலம் __________.

(1) காவிய காலம் (2) இடைக்காலம்

(3) சங்க காலம் (4) பிற்காலம்

**126.** சிலப்பதிகாரம் - பிரித்தெழுதுக :

(1) சிலம் + அதிகாரம் (2) சிலப் + அதிகாரம்

(3) சிலப்பு + அதிகாரம் (4) சிலம்பு + அதிகாரம்

**127.** அச்சு இயந்திரங்களின் வருகையால் __________ மரபு மறைந்தது.

(1) அச்சுப் பண்பாடு (2) எழுத்து

(3) ஓலைச்சுவடி (4) அச்சுக்கலை

**128.** மக்களின் கடமை - இலக்கணம் காண்க.

(1) உம்மைத் தொகை (2) ஏழாம் வேற்றுமை

(3) வினைத் தொகை (4) பண்புத் தொகை

www.careerindia.com

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 129 - 135)**

பிற்காலத்திலும் இக்காலத்திலும் காப்பியவளர்ச்சி அத்துணைச் சிறப்படையவில்லை. இக்காலத்தில் கதை இலக்கியம் வளர்ச்சி பெற்றமையால், காப்பியம் எழுதுவாரும் மிக மிகக் குறையலாயினர். எனினும் சிறிய அளவிலானவையும் மொழி பெயர்ப்புக்களும், பழைய காப்பியங்களை அடியொற்றியவையுமாகச் சிற்சில நூல்கள் தோன்றின. பாரதியாரின் பாஞ்சாலி சபதம் அவற்றுட் குறிப்பிடத்தக்கது. ஐந்து சருக்கங்களும் இரு பாகங்களுமாயமைந்த இந்நூல் விருத்தமும் சிந்துமாக 308 பாடல்களைக் கொண்டது.

வியாச பாரதத்தின் முன்பகுதியைப் புதிய உணர்ச்சியுடன் படைத்துப் பாரதமாதாவின் அவல நிலையைப் பாஞ்சாலியின் மேலிட்டு, உள்ளுணர்த்தும். ஒப்பற்ற காப்பியமாக இலங்குகிறது கவிமணியின் 'நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம்' 11 படலங்களாலான நூல் ; நகைச்சுவை மிக்க சமுதாய அங்கதப்பாட்டு இது. பாரதிதாசனின் பாண்டியன் பரிசு 94 இயல்களில் 361 எண்சீர் விருத்தங்களைக் கொண்டு, வரலாறு போன்ற கற்பனைக் கதையொன்றைச் சீர்திருத்த நோக்குடன் படைக்கிறது. நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் 'அவனும் அவளும்' என்பது ஒரு சமூகக் காப்பியமாகும். கண்ணதாசனின் 'மாங்கனி' 40 தலைப்பில் 1834 அடிகளைக் கொண்டது. முடியரசனின் 'பூங்கொடி' 31 காதைகளில் 5233 அடிகளைக் கொண்டு, மணிமேகலைக் கதையை முற்றிலும் தழுவி எழுதப்பட்டது. சுத்தானந்த பாரதியாரின் பாரதசக்தி மகாகாவியம் ஐந்து காண்டங்களையும் 136 படலங்களையும் 3103 அடிகளையும் கொண்டது.

புலவர் குழந்தை, தந்தை பெரியாரின் தன்மான இயக்க அடிப்படையில், இராம காதைக்கு மாற்றாகப் பாடியது, 'இராவண காவியம்'. பாரதிதாசன் வாழ்த்துடன் உள்ள இந்நூலில் 5 காண்டங்களும் 57 படலங்களும் 3100 விருத்தப்பாக்களும் உள. இவையும் இவை போல்வனவுமாகக் குறுங்காப்பிய நூல்கள், நெடும்பாட்டுக்கள் தோன்றி வருகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகக் கிறித்தவத்துறைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் சூ. இன்னாசி, 'தேவசகாயம்' எனும் கிறித்தவத் தொண்டர் பற்றி, 2007 இல் ஒரு பெருங்காப்பியம் எழுதியுள்ளார். நான்கு காண்டம், 40 படலம் 4135 பாடல்கள் கொண்ட 'திருத்தொண்டர் காப்பியம்' எனும் நூல் தமிழ் மரபுப்படி அமைந்துள்ளது. ஏசுபிரான் கூறிய பல கதைகள் இதில் கிளைக் கதைகளாக அமைந்துள்ளன. நல்ல யாப்பு வடிவத்தில், தமிழ்க் காப்பிய மரபுப்படி அமைத்த மிகச் சிறந்த நூல் இது.

**129.** நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் :

(1) தன்னுணர்ச்சிப் பாடல் (2) காப்பியம்

(3) அங்கதப் பாட்டு (4) குறுங்காப்பியம்

**130.** பாஞ்சாலி சபதத்தின் பா வகை :

(1) ஆசிரியம், பரிபாடல் (2) விருத்தம், வெண்பா

(3) சிந்து, கலிப்பா (4) விருத்தம், சிந்து

www.careerindia.com

131. காப்பிய வளர்ச்சி __________ ; கதை எழுத்து __________ ; __________ பெருகினர்.

(1) சிறந்தது, குறைந்தது, காப்பியம் எழுதுவோர்

(2) குறைந்தது, தோன்றியது, காப்பியம் எழுதுவோர்

(3) குறைந்தது, வளர்ந்தது, கதை எழுதுவோர்

(4) தோன்றியது, குறைந்தது, கதை எழுதுவோர்

132. பெருங்காப்பியம் எழுதியவர் __________ இது __________ பற்றியது.

(1) கண்ணதாசன், ஏசுபிரான்

(2) தேவசகாயம், கிறித்தவத் தொண்டர்

(3) சூ. இன்னாசி, கிறித்தவத் தொண்டர்

(4) சூ. இன்னாசி, ஏசுபிரான்

133. ஒட்டி அமைந்த காப்பியம் ; எதிராக அமைந்த காப்பியம் :

(1) அவனும் அவளும், ராமகாதை

(2) அவனும் அவளும், பாண்டியன் பரிசு

(3) பாஞ்சாலி சபதம், இராவண காவியம்

(4) பூங்கொடி, மாங்கனி

134. பாண்டியன் பரிசில் இணைந்திருப்பவை :

(1) வரலாறு போன்ற கற்பனை, சீர்திருத்த நோக்கு

(2) வரலாற்றுக் கதை, சமூகப் புரட்சி

(3) மணிமேகலை தழுவல், தன்மான இயக்கம்

(4) கற்பனைக் கதை, நெடும்பாட்டு

135. குறுங்காப்பியம், நெடும்பாட்டு : நிரல்படுத்துக.

(1) குறு+காப்பியம்; நெடு+பாட்டு

(2) குறும்+காப்பியம்; நெடும்+பாட்டு

(3) குறுகிய+காப்பியம்; நெடிய+பாட்டு

(4) குறுமை+காப்பியம்; நெடுமை+பாட்டு

136. தொடக்க நிலை ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு வண்ணம் தீட்டவும் வரையவும் ஊக்கம் தருகிறார். இது எதற்கு உதவுகிறது ?

(1) கற்பித்தலில் இருந்து ஆசிரியர் இளைப்பாறுதல்

(2) மாணவர்களை செயலில் ஈடுபடுத்தி வகுப்பில் அமைதி காத்தல்

(3) செம்மையான மூளைச் செயல்பாட்டை வளர்த்தல்

(4) மாணவர்களுக்கு மகிழ்வளித்தல்

137. ஒரு குறிப்பிட்ட வகுப்பு முற்றுப் பெறும்போது மாணவர்கள் பெற வேண்டிய அறிவு, திறமைகள், மனப்பாங்குகள் பற்றி விவரிக்கும் வாசகம் :

(1) அடிப்படை எழுத்தறிவுப் பயன் விளைவு

(2) கற்பித்தல் பயன் விளைவு

(3) கற்றல் பயன் விளைவு

(4) எண்ணறிவுப் பயன் விளைவு

138. ஓர் ஆசிரியர் தன் வகுப்பில் குழு உரையாடல், மாணவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இரண்டையும் ஊக்கப்படுத்துகிறார். எழுத்து கூட்டுதல் அல்லது உச்சரிப்பில் ஏற்படும் பிழைகள் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. அவர் வகுப்பறையில் பயன்படுத்தும் அணுகுமுறை __________.

(1) கட்டமைப்பு முறை (2) மரபானது முறை

(3) எக்லெக்டிக் முறை (4) அமைப்பியல் முறை

139. காலம் காட்டும் சொற்களைக் கற்பிக்க உங்கள் வகுப்பில் இரண்டு படங்களைக் காட்டுகிறீர்கள், இரண்டிலும் ஒருவரே இருக்கிறார். ஒரு படம் 15 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்டது, மற்றது அப்போதுதான் எடுக்கப்பட்டது. வகுப்பில் அந்தப் படத்தில் உள்ள மனிதரின் கடந்த காலம், நிகழ் காலம், தோற்றம், பழக்க வழக்கங்கள் பற்றிய பேச்சைத் தொடங்குகிறீர்கள். நீங்கள் பயன்படுத்தும் முறை :

(1) விதிமுறை அடிப்படை இலக்கணம்

(2) பரிந்துரைப்பு இலக்கணம்

(3) அமைப்பியல் இலக்கணம்

(4) கல்விமுறை இலக்கணம்

140. 'சூழல் மாசு' பற்றிய ஒரு பாடத் திட்டத்தை உருவாக்கும் போது உங்களுடைய முதல்கட்ட செயல்பாடு எதுவாக இருக்கும் ?

(1) நோக்கங்களை வரையறை செய்தல்

(2) அறிமுகக் கேள்விகள் தயாரித்தல்

(3) பாடப்பொருளை பலமுறை வாசித்தல்

(4) கற்பித்தல் துணைப் பொருள்களைத் தேர்ந்தெடுத்தல்

141. எந்த முறைசாரா பயிற்சியும் இன்றி இயற்கையாக மொழி கற்கப்படுவது இவ்வாறு குறிக்கப் படுகிறது :

(1) கற்றல்

(2) கல்விப் புலமை

(3) மொழித் தன்வயமாக்கம்

(4) ஏற்பு

**142.** குழந்தைகள் ஒரு மொழியை மிகத் திறமாகக் கற்க இது தேவைப்படுகிறது :

(1) செயலூக்கம்

(2) நற்திறம் கொண்ட ஆசிரியர் ஒருவர்

(3) நல்ல பாடப்புத்தகம்

(4) மனத்தடை

**143.** மொழியியல் அறிவுத் திறனாற்றல் மாணவர்களுக்கு இதனைக் கற்றுத் தருகிறது :

(1) மேலும் மேலும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது

(2) இலக்கணப்படி சரியாகவும், தவறாகவும் அமையும் வாக்கியங்கள் வேறுபடுத்தி அறிதல்

(3) இலக்கணப்படி சரியாக இல்லாதபோதும் சரளமாகப் பேசுவது

(4) மொழியை எப்படி, எப்போது சரியான முறையில் பயன்படுத்துவது என அறிவது

**144.** ஓர் ஆசிரியர் குடை, மழை அங்கி, திருப்புளி போன்ற மெய்யான பொருள்களை வகுப்புக்குக் கொண்டு வருகிறார். அந்தப் பொருள்களைப் பற்றி இரண்டு, மூன்று வாக்கியங்களில் விவரிக்கும்படி மாணவர்களிடம் கேட்கிறார். இந்தப் பொருள்கள் இவ்வாறு குறிக்கப் படுகின்றன :

(1) ரியலியா
(2) மொழி உள்ளீடுகள்
(3) கற்பித்தல் உபகரணங்கள்
(4) கருவிகள்

**145.** முகிலன் பள்ளிக்குப் போக இருப்பதால் மிக மகிழ்ச்சியாக இருக்கிறான். அவனது குடும்பத்திலிருந்து பள்ளிக்குச் செல்லும் முதல் குழந்தை அவன். அவனுடைய பெற்றோர்களோ வேறு யாருமோ பள்ளியில் சேர்ந்து படித்தவர்கள் இல்லை. முகிலன் ஒரு __________ மாணவன்.

(1) சிறுபான்மை
(2) முதல் தலைமுறை
(3) இரண்டாம் தலைமுறை
(4) விளிம்பு நிலைப்பட்ட

**146.** மாணவர்கள் இருவர் இருவராகவோ, குழுவாகவோ இணைந்து சிக்கல்களைத் தீர்க்க முக்கியத்துவம் தரும் அணுகுமுறை :

(1) அமைப்பியல் அணுகுமுறை

(2) தகவல் பரிமாற்ற மொழி கற்பித்தல்

(3) நடத்தையியல் அணுகுமுறை

(4) முழுமையான மொழி அணுகுமுறை

www.careerindia.com

CAREERINDIA

**147.** 'தண்ணீர்' பற்றி ஒரு பத்தி எழுதும்படி மாணவர்களிடம் கேட்கிறார் ஓர் ஆசிரியர். மாணவர்கள் அறிவியலிலும், சமூக அறிவியலிலும் தங்களுக்குக் கற்பிக்கப்பட்டது பற்றி கலந்துரையாடல் செய்கின்றனர். பிறகு தண்ணீர் பற்றிய பத்தியை எழுதத் தொடங்குகின்றனர். இது எதற்கான எடுத்துக்காட்டு ?

(1) தகவல் தொடர்பு அணுகுமுறை

(2) பயன்பாட்டில் உள்ள மொழி

(3) அறிவியல் மொழி

(4) பாடப்பிரிவு கடந்த மொழி

**148.** பாடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி மாணவர்களுக்குக் கடினமாக இருப்பதை ஓர் ஆசிரியராக நீங்கள் கண்டறிகிறீர்கள். மாணவர்களுக்கு ஏற்ற வகையில், மொழியை எளிமைப்படுத்துவதுடன் உள்ளடக்கத்திலும் சில மாற்றங்களைச் செய்கிறீர்கள். இது எவ்வாறு குறிக்கப்படுகிறது ?

(1) திறனாய்தல் (2) ஏற்றுப் பயன்படுத்தல்

(3) மாற்றி அமைத்தல் (4) மதிப்பீடு செய்தல்

**149.** எல்லோரும் ஹிந்தி பேசும் கிராமத்தில் பிறந்து வளரும் நீங்கள் பள்ளிக்குப் போகாமலேயே ஹிந்தி பேசத் தொடங்குகிறீர்கள். பிறகு பள்ளிக்குப் போனபிறகு ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி, உருது படிக்கிறீர்கள். இப்போது ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசுகிறீர்கள். இப்போது உங்கள் முதல் மொழி எது ?

(1) சமஸ்கிருதம் (2) ஆங்கிலம்

(3) ஹிந்தி (4) உருது

**150.** நீங்கள் கற்பிக்கச் செல்லும் போது பாடப்புத்தகத்தில் குழந்தைப் பாடல்கள் தொடங்கி படக் கதைகள், அதற்குப் பிறகு அகர வரிசை என்ற முறையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறீர்கள். மொழிக் கல்வியில் இந்த வகை வரிசை முறையில் பாடங்கள் அமைவதைப் பரிந்துரைக்கும் அணுகுமுறை :

(1) அழகியல் அணுகுமுறை

(2) பாட்டம் அப் அணுகுமுறை

(3) டாப் டவுன் அணுகுமுறை

(4) எக்லெக்டிக் அணுகுமுறை

- o O o -

www.careerindia.com

SPACE FOR ROUGH WORK

www.careerindia.com

**: கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் **பக்கம் 2**-ல் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் **நீலம்/கருப்பு பந்துருள்முனைப் பேனா**வினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும். குறியீடு செய்யப்பட்ட விடையை மாற்ற இயலாது.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச்சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர். விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப்பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்.
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டு வரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவது உட்பட பிற நடவடிக்கை களுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வு இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும். **மேலும், தேர்வர்கள் தங்களது இடது பெருவிரல் அடையாளத்தை வருகைப் பதிவுத் தாளில், ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பதிவு செய்யவேண்டும்.**
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்து விதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள் படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச்சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.
15. **தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத்தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.**

www.careerindia.com

CAREERINDIA

## निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **नीले/काले बॉल पॉइन्ट पेन** से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के कोड या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
5. परीक्षा पुस्तिका/उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका कोड व संख्या को परीक्षार्थी सही तरीके से उपस्थिति-पत्र में लिखें।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी। इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्विच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए। इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और परीक्षार्थी विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं उपस्थिति-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार उपस्थिति-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा। **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान उपस्थिति-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ।**
12. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी परीक्षण संस्था के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला परीक्षण संस्था के नियमों एवं विनियमों के अनुसार होगा।
14. किसी भी परिस्थिति में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल/कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र निरीक्षक को अवश्य सौंप दें।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।***

## READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Blue / Black Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against the candidate including cancellation of examination.
9. Each candidate must show on demand his/her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his/her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic/Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Examining Body with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Examining Body.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***

www.careerindia.com